**ஏறாவூர்பற்று நகர சபை**
**மட்டக்களப்பு மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2019 மே 15 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2019 ஆம் ஆண்டு மே 08 ஆந் திகதி தவிசாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து நிதிக்கூற்றுக்களில் 2018 ஆம் ஆண்டு திசெம்பர் 31 இல் **நகர** சபையின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றிலினையும் இலங்கை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 <u>முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை</u>

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| I. | நவம்பர் மாதத்திற்குரிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 499,724 பெறவேண்டியிருந்த போதிலும் அவற்றினை நிதிக்கூற்றில் வெளிப்படுத்தவில்லை. | உரிய காலங்களில் பெற நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. |
| II. | முத்திரைத் தீர்வை ரூபா 326,764 பெறப்பட வேண்டியிருந்துள்ள போதிலும் அவற்றினை நிதிக்கூற்றில் வெளிப்படுத்தவில்லை. | உரிய காலங்களில் ஆவணங்களைப் பெற நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. |
| III. | சபையில் 40 இயந்திர உபகரணங்கள் காணப்படுகின்ற போதிலும் அவற்றின் மொத்தப் பெறுமதி ரூபா 8,185,903 தொகை என மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் விலைமதிப்பு திணைக்களத்திடம் இருந்து சொத்துக்கள் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சரியான தொகை வெளிப்படுத்த வேண்டும். | ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. |
| IV. | மீளாய்வாண்டில் ரூபா 1.38 மில்லியன் பெறுமதியுடைய | மீளாய்வாண்டில் உள்வந்தவை அவ் | ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| ரக்டர் இயந்திரம் பெறப்பட்டுள்ள போதிலும் அவை இறுதிக் கணக்கிற்கு கொண்டுவரப்படவில்லை. | ஆண்டிலேயே சேர்க்கப்பட வேண்டும். | |

1.3.2. பெற வேண்டியவைகள் செலுத்த வேண்டியவைகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | முற்பணமாக கொடுக்கப்பட்ட ரூபா 3,014,196 தொகையினை சரியாக அடையாளம் கண்டு அவற்றினை உரியவர்களிடமிருந்து அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மிக விரைவில் அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அறவிட ஏற்ற ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. |
| (ஆ) | செலுத்த வேண்டிய ரூபா 3,683,541 தொகையினை சரியான முறையில் அடையாளம் கண்டு கொடுத்துத் தீர்க்கப்படவில்லை. | உரிய காலத்தில் உரியவர்களுக்கு கொடுத்து தீர்க்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் முறையாக செலுத்தப்படும். |

1.4 இணங்காமை

1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 255 அத்தியாயம் 177(2) ஆம் பிரிவு | நகர சபையின் நிதி நிலைமைக் கூற்றின் பொழிப்புரை, அடுத்துவரும் மார்ச் மாதம் முதலாம் திகதிக்கு முன் பொதுமக்களின் தகவலுக்காக அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட வேண்டிய போதிலும் சபையின் 2017, | உரிய காலத்தில் பிரசுரிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| | | 2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் சுருக்கத்தை பொது மக்களின் தகவலுக்காக அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு 2019 ஏப்ரல் 31 ஆந் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

2. நிதிசார் மீளாய்வு
----------------------

2.1 நிதிசார் விளைவுகள்
--------------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை மிஞ்சிய வருமானம் ரூபா 2,673,521 ஆக இருந்ததுடன் அதற்கு எதிரான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவீனத்தை மிஞ்சிய வருமானம் ரூபா 381,544 தொகையாக இருந்தமை நிதிவிளைவுகளில் ரூபா 2,292,927 முன்னேற்றத்தை காட்டுகின்றது.

2.2 வருமான நிர்வாகம்
-------------------------

2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்
-----------------------------------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்களின்படி ரூபா 1,575,399 அறவிடாமல் நிலுவையாக காணப்படுகின்றது.

2.2.2 வீதவரி மற்றும் வரி
-------------------------

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்குரிய உண்டியல் தொகை ரூபா 2,954,298 இல் இருந்து ரூபா 1,538,560 தொகை மட்டுமே அறவிடப்பட்டுள்ளது. சராசரியாக 50% மான வரிகள் அறவிடப்பவில்லை என்பதுடன் மீளாய்வாண்டுக்கு முற்பட்ட காலத்துக்குரிய நிலுவையில் இருந்து சராசரியாக 50% வீதத்திற்கு | துரிதமாக மீள்மதிப்பீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். |

குறைவான தொகையே அறவிடப்பட்டுள்ளது.

2.2.3 வாடகை

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| கேள்வி வாடகை, இறைச்சி கடை குத்தகை, பழைய சந்தைக் குத்தகை ரூபா 4,717,114 தொகை 2012 ஆம் ஆண்டில் இருந்து அறவிடப்படாமல் நிலுவையாக காணப்படுகின்றது. | துரிதமாக அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

2.2.4 அனுமதிப்பத்திரக் கட்டணங்கள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் ரூபா 1,629,185 அறவிடப்படாமல் நிலுவையாக காணப்படுகின்றது. மீளாய்வாண்டு ஆரம்பத்திலும் ரூபா 1,709,590 நிலுவையாக காணப்பட்டது. | 2015 ஆம் ஆண்டுக்கு முற்பட்ட நிலுவைகளையும் அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிலுவையை குறைக்க முடியும் |

2.2.5 ஏனைய வருமானங்கள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| ஏனைய வருமானங்கள் ரூபா 2,138,308 தொகை அறவிடப்படாமல் நிலுவையாக காணப்படுகின்றது. | துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | துரித நடவடிக்கை எடுக்கப்படும் |

2.2.6 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக்கட்டணங்கள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மாகாண சபையின் பிரதம செயலாளர் மற்றும் அனைத்து அதிகாரிகளிடமிருந்தும் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 499,724 | உரிய காலத்துக்குள் அடையாளம் காண நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் உரிய நேரத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். |

தொகையான நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் ரூபா 326,764 தொகையான முத்திரைக்கட்டணங்கள் பெறப்பட வேண்டியிருந்தன.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 செயலாற்றல்

நகர சபைகள் கட்டளைச்சட்டத்தின் 04ம் பிரிவின் பிரகாரம், பொதுச் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வழிகள், மற்றும் மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் குறைபாடுகள் காணப்படுகின்றது.

(அ) செயற்பாடுகளின் செயலாற்றலின் தாமதங்கள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| I. | இரண்டு மதஸ்தலங்களுக்கு சொந்தமான காணியில் சுமார் ரூபா 193 மில்லியன் செலவில் சந்தைக் கட்டிட தொகுதி கட்டுவதற்கு 2017 ஆம் ஆண்டில் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ள போதிலும் இவ்வேலைகள் 2019 ஏப்ரல் வரை முடிவடையவில்லை. | நிதி ஒதுக்கீடுகளை விரைவில் பெற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | விரைவில் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. |
| II. | நூலக கட்டிட தொகுதியுடன் கலாச்சார மண்டப கட்டிடம் கட்டுவதற்கு 2016 ஆம் ஆண்டில் ரூபா 117 மில்லியன் மதிப்பீட்டில் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ள போதிலும் வேலைகள் இன்னும் முடிவடையவில்லை. | பூரணமாக முடிவடைய நடவடிக்கை எடுக்க வேண்டும் | ஒப்பந்த வேலைகள் முடிவடைந்துள்ளன. |

(ஆ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| ஐக்கிய நாடுகள் அமைப்பின் அங்கத்துவ நாடுகளின் அரச தலைவர்களின் தலைமையில் 2015 ஆம் ஆண்டு நிலைபேறான அபிவிருத்தி மகாநாட்டில் தீர்மானிக்கப்பட்டதன் பிரகாரம் சபையினால் 2030 ஆம் ஆண்டில் அடைந்து கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் தொடர்பாக அளவிடுவதற்கான குறிகாட்டிகளை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2030 இல் அடைந்து கொள்ள வேண்டிய இலக்கை அடைய படி முறைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | இலக்கை அடைய நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

(இ) திண்மக்கழிவு முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| திண்மக்கழிவுகளை முகாமைத்துவம் செய்வதற்காக UNOPS நிறுவனத்தினால் ஒப்பந்தம் ஒன்று 2017 ஏப்ரல் மாதத்தில் கைச்சாத்திடப்பட்டதற்கு இணங்க சேகரிக்கப்படும் உக்காத கழிவுகளை கொடுவாமடு Land Fill நிலையத்துக்கு கொண்டு செல்வதெனவும் உக்கக்கூடிய கழிவில் இருந்து கூட்டுப்பசளை தயாரிப்பது எனவும் இணங்கியுள்ள போதிலும் இதற்கு முரணாக சில கழிவுப் பொருட்கள் ஆற்றங்கரையில் கொட்டப்படுவதுடன் கூட்டுப்பசளையும் தயாரிக்கப்படுவதும் இல்லை. | விடுமுறை நாட்களிலும் கொட்டுவதற்கு விசேட ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். | மாற்று நடவடிக்கைகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. |

(ஈ) சுற்றுச்சூழல் பிரச்சனைகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2017 ஆம் ஆண்டில் ரூபா 32 மில்லியன் மதிப்பீட்டில் ரூபா 13,654,689 செலவிடப்பட்டு மத்திய அரசின் உல்லாசப் பிரயாணத்துறை அமைச்சினால் சிறுவர் பூங்கா அமைக்கப்பட்டுள்ள போதிலும் இதற்கு அருகாமையில் திண்மக்கழிவுகளை போடப்படுவதினால் 02 வருடங்களுக்கு மேலாக இச் சிறுவர் பூங்காவினை பொதுமக்கள் பயன்படுத்த முடியாதுள்ளது. | காலம் தாழ்த்தாது நடவடிக்கை விரைவில் எடுத்து பாவனைக்கு விடவேண்டும் | விரைவில் பாவனைக்கு உட்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

(உ) செயற்பாடுகளில் செயலாற்றலில் தாமதங்கள்

பின்வரும் செயற்பாடுகளில் செயலாற்றலில் தாமதங்கள் ஏற்பட்டன.

| விபரம் | மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா (மில்லியன்) | முடிக்கப்பட வேண்டிய திகதி | 31 திசெம்பர் 2018 இல் செலவினம் ரூபா (மில்லியன்) | தாமதத்திற்கான காரணம் |
|---|---|---|---|---|
| சந்தைக்கட்டிடம் | 193 | 2017 ஜூன் | 51 | நிதி ஏற்பாடு இல்லை |
| நூலக நிலையமும் கலாசார மண்டபமும் | 117 | 2016 டிசெம்பர் | 17.45 | நிதி ஏற்பாடு இல்லை |

(ஊ) கைவிடப்பட்ட செயற்பாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2001 ஆம் ஆண்டின் சராசரியாக 10 மில்லியன் செலவில் கட்டி முடிக்கப்பட்ட 64 கடைத் தொகுதிகளைக் கொண்ட பிரதான வீதியில் அமைந்துள்ள சந்தைக் கட்டிட தொகுதி இதுவரை மக்களின் பாவனைக்கு கையளிக்கப்பட்டு வாடகை வருமானம் எதுவும் பெறப்படாது | நீதிமன்ற தீர்வு வந்தபின் உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | நீதிமன்றத்தில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. |

மூடப்பட்ட நிலையில் காணப்படுகின்றது.

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| புன்னைக்குடா வீதியில் அமைந்துள்ள இரண்டு வணக்க ஸ்தலங்களுக்கு சொந்தமான காணியினை 33 வருடங்களுக்கு நீண்டகால குத்தகைக்கு பெற்று ரூபா 193 மில்லியன் மதிப்பீட்டில் சந்தைக் கட்டிட தொகுதியினை அமைக்க ஒக்டோபர் 2016 இல் ஒப்பந்தம் செய்யப்பட்டு அத் திகதியில் இருந்து மாதாந்தம் ரூபா 56,000 வாடகை செலுத்தப்படுகின்ற போதிலும் சந்தைக் கட்டிடத் தொகுதி முடிவடையாததினால் நில வாடகை ஒக்டோபர் 2016 இல் இருந்து வருமானம் ஏதுவும் பெறப்படாத நிலையில் அவ் வணக்க ஸ்தலங்களுக்கு செலுத்தப்பட்டு வருகின்றது. | விரைவில் நிதியேற்பாடுகள் செய்யப்பட வேண்டும். இல்லாவடின் மாதாந்தம் ரூபா 56,250 வருமானம் இழக்கப்படும் | நிதியினைப்பெற நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

## 3.3 மனிதவள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | அங்கிகரிக்கப்பட்ட ஆளணியைவிட 14 உழியர்கள் மேலதிகமாக காணப்படுகின்றனர். | பொருத்தமான மாற்று வேலைத்திட்டங்களை அமுல் படுத்த வேண்டும். | 180 நாட்கள் கடமையை பூர்த்தி செய்த 40 ஆளணியினர் நிரந்தர ஆளனியுடன் சேர்க்கப்பட்டுள்ளனர். |
| (ஆ) | ஊழியர் கடன்கள் | | |
| | இரண்டு வருடத்திற்கு மேலாக பதவியை விட்டுச் சென்ற இடமாற்றமாகி சென்ற 04 நபர்களிடமிருந்து ரூபா 98,750 தொகை அறவிடப்படாமல் நிலுவையாக காணப்படுகின்றது. | உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அல்லது பிணையாளிகளிடமிருந் து அறவிடப்பட வேண்டும். | நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

3.4 செயற்பாட்டு செயற்தினனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நகர சபை அதிகார எல்லைக்குட்பட்ட சகல ஆதனங்களையும் வருடாந்தம் மீள் மதிப்பீடு செய்து வீதவரியினை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2019 இல் நடவடிக்கை எடுக்க தவறக்கூடாது. | 2019 இல் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | பழைய சந்தைக்கடைகளை வாடைகைக்கு வழங்கியவர்களிடம் இருந்து மொத்தம் 39 தனிநபர்களிடமிருந்து 2011 ஆம் ஆண்டில் இருந்து 2016 ஆம் ஆண்டுவரை மொத்தம் ரூபா 5,018,060 அறவிடப்படாமல் நிலுவையாக காணப்படுகின்றது. 2011 ஆம் ஆண்டில் நிலுவை இருந்துள்ள போதிலும் அவை அறவிடப்படாமல் தொடர்ச்சியாக அடுத்தடுத்த ஆண்டுகளுக்கும் 2016 ஆம் ஆண்டு வரை அவர்களுக்கே கொடுக்கப்பட்டுள்ள போதிலும் பழைய நிலுவைகள் அறவிடப்பட்டிருக்கவில்லை. மேலும் இவர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சட்ட நடவடிக்கை மேற்கொண்டு அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை. எதிர் காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். |

3.5 வருடாந்த பொருள் இருப்பு மெய்யாய்வு

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வருடாந்த பொருள் இருப்பு மெய்யாய்வு மீளாய்வாண்டிற்கு செய்யப்படவில்லை. மேலும் நூலகங்களுக்கு பல வருடங்களாக செய்யப்படவில்லை. | நடவடிக்கை விரைவு படுத்த வேண்டும். | தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |

3.5.1 வாகனங்களின் பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையில் காணப்படும் 09 வாகனங்களுக்கு வாகன பதிவுச் சான்றிதழ் புத்தகம் மோட்டார் போக்குவரத்து திணைக்கள சட்ட திட்டங்களுக்கு அமைய பெறப்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கை விரைவு படுத்த வேண்டும். | நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

3.5.2 ஒப்பந்த நிர்வாகம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கருமாரியம்மன் கோயில் வீதி வடிகான் அமைப்பு வேலைகளுக்கு 2015 ஆம் ஆண்டில் இருந்து 5 கட்டங்களாக ரூபா 8,324,190 மதிப்பீடு செய்யப்பட்டுள்ள போதிலும் நெல்சிப் மாகாண குறித்தொதுக்கப்பட்ட நன்கொடை, மத்திய அரசு நிதி என்பவற்றின் மூலம் நிதி பெறப்பட்டு ரூபா 9,048,855 செலவிடப்பட்டுள்ள போதிலும் வேலைகள் இன்னும் பூரணமாக முடிவடையவில்லை. மேலும் இவ்வேலைக்கு ஒரு மதிப்பீடு தயாரிக்கப்படாது 05 மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு 05 ஒப்பந்தங்களை செய்து வேலைகள் பிரிக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளது. | சரியான முறையில் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தவிர்க்க முடியாத சந்தர்ப்ப சூழ்நிலை, பற்றாக் குறையான நிதி நிலைமை. |

4. கணக்களி பொறுப்பும் நல்லாளுகையும்

4.1. பாராளுமன்ற கணக்கு குழு அறிக்கை

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஏறாவூர் நகர சபையின் 2017 ஆம் அண்டில் பாராளுமன்ற பொதுக் கணக்கு குழு அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டவற்றிற்கு இன்றுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பாராளுமன்ற கணக்கு குழு அறிக்கையை விரைவில் அமுல்படுத்தி செயற்படுத்த வேண்டும். | விரைவாக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் வீடு, கடை, நிலம் போன்றவற்றிற்கான வீதவரி பாதீட்டுத் தொகையில் சராசரியாக 50% வீதம் மட்டும் அறவிடப்பட்டுள்ளதுடன் நிலுவைத் தொகையிலும் 53 விதமான தொகையே அறவிடப்பட்டுள்ளமை பாதீட்டை ஒரு சிறந்த கட்டுப்பாட்டு கருவியாக பயன்படுத்தவில்லை என்பது புலனாகின்றது. | சரியான உத்தேச பாதிடுகள் தயாரிக்கப்பட வேண்டும். மேலும் கடந்த கால வருமானம் செலவினங்களுக்கு கருத்தில் கொள்ள வேண்டும். | எதிர்காலத்தில் சரியான பாதீடுகள் தயாரிக்கப்படும். |

4.3 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 255) படி உள்ளக கணக்காய்வு பிரிவு ஒன்று ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | குழு அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். | தொடர்ந்து செயற்படகின்றது.. |

4.4 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் எதுவித கணக்காய்வு முகாமைத்துவ குழுக்கூட்டமும் கூட்டப்படவில்லை. | ஒழுங்கு முறையில் கணக்காய்வு குழுக்கூட்டம் நடைபெற்று பிரச்சணைக்கு தீர்வு காணப்பட வேண்டும். | தற்போது நடைபெறுகின்றது. |